வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 09.09.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 252 பக்கங்கள் : 08



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# நல்லிணக்கம், நிரந்தர அமைதிக்கு பொறுப்புக்கூறலும் நீதியும் அவசியம்

## மனித உரிமைகள் ஆணையாளர் வலியுறுத்து




ஜெனிவா, செப்ரெம்பர் 09

நீதி மற்றும் பொறுப்புக்கூறல் குறித்து இலங்கை அரசாங்கம் தீர்க்க மான நடவடிக்கை எடுக்க வேண்டும். இவையே, எதிர்கால குணப்படுத் தல் - நல்லிணக்கம் - நிலையான அமைதியை வளர்ப்பதற்கு அவசிய மானவை - என்று தெரிவித்துள்ள ஐ. நா. மனித உரிமைகள் ஆணை யாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பல தசாப்தங்களாக ஆதிக்கம் செலுத்தி வந்த வன்முறை மற்றும் தண்டனையின்மை சுழற்சிகளிலிருந்து மீள்வதற்கான வரலாற்று சிறப்புமிக்க வாய்ப்பை இலங்கை தற்போது பெற்றுள்ளது. இதனை தவ றவிடக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் ஆரம்பமானது. இதில், இலங்கை தொடர்பாக அறிக்கையை சமர்பித்து உரையாற்றும் போதே அவர் மேற்படி விடயங்களை சுட்டிக்காட்டினார்.

இதனிடையே அண்மையில், தாம், இலங்கைக்கு சென்றபோது, நாட்டின் மிக நீண்டகால பிரச்னைகளுக்கு, புதிய திசை நோக்கிய பயணத்துக்கு, அந்த நாட்டின் தலைமை உறுதியளித்தது. இந்த நிலையில், புதிய அணுகு முறை, ஒத்திசைவானதும் காலக்கெடுவை வழங்கக் கூடியதாகவும் அமைய வேண்டும்.

பொறுப்புக் கூறல், நீதியை

07

# உள்ளக பொறிமுறை மூலமே பொறுப்புக்கூறலுக்கு உறுதி

## ஜெனிவாவில் இலங்கை கோரிக்கை



ஜெனிவா, செப். 09

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பொறுப்புக்கூறல் திட்டம் உட்பட சர்வதேச சமூகத்தால் விதிக்கப்படும் எந்தவொரு வெளிப்புற செயல்முறை களையும் நிராகரிப்பதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

07

# டெங்கு நோய் கட்டுப்பாடு யாழில் தீவிரமாக்கப்படும்

யாழ்ப்பாணம், செப். 09

யாழ். மாவட்டத்தில் பருவ மழைக்காலம் ஆரம்பிக்க இருப்பதால் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டியுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கலாநிதி ஆ. கேதீஸ் வரன் தெரிவித்துள்ளார்.

07

# சகோதரனின் வீட்டில் கூரை வேலை செய்தவர் கீழே விழுந்து உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், செப். 09

சகோதரனின் வீட்டு கூரை வேலை செய்தவர் கீழே விழுந்து உயிரிழந்தார்.

மானிப்பாயைச் சேர்ந்த சிவநாயகம் சுவீஸ் (வயது 43) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர் கடந்த 3ஆம் திகதி சகோதரனின் வீட்டு கூரை வேலை செய்வதற்கு சென்றுள்ளார். அங்கு கூரை வேலை யில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளை கூரை மரம் முறிந்து கீழே விழுந்து படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்ப்பிக்கப்பட்ட நிலையில்

07

# இந்தியாவை மீறி எவருமே தீர்வு முன்வைக்கமுடியாது

## ஜனநாயக போராளிகள் கட்சி

யாழ்ப்பாணம், செப். 09

இலங்கையில் இந்தியாவை மீறி எவரும் ஒரு தீர்வை தமிழ் மக்களுக்கு முன்வைக்க முடியாது என்கின்ற நம்பிக்கையுடன் தமிழ் மக்கள் இருக்கின்றார்கள் என ஜனநாயகப் போராளிகள் கட்சி தலைவர் சி. வேந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் தனது இல்லத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

07

# மலையக அதிகார சபை கை வைக்க வேண்டாம்

## மனோ எம். பி. ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, செப். 09

2018ம் ஆண்டு 32ஆம் இலக்க சட்டத்தின் மூலம் நாம் எமது நல்லாட்சி காலத்தில் போராடி பெற்று உருவாக்கியஇ 'மலையக அதிகார சபை' என எம்மால் அறியப்படும் 'பெருந்தோட்ட பிராந்திய புதிய கிராமங் கள் அபிவிருத்தி அதிகார சபை'யை மூடி விட, உங்கள் அரசாங்கத்தால் எடுக்கப்படும் முயற்சியை உடனடியாக கை விடுங்கள், என ஜனாதிபதி

07

# ஐஸ் கொள்கலன்கள் குறித்து உண்மை வெளிவர வேண்டும்

## அரசிடம் கோருகிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, செப். 09

ஐஸ் ரக போதைப்பொருள் உற்பத்திக்கானஇரண்டு மூலப்பொருட்கள் கொண்ட கொள்கலன்கள் கண்டு பிடிக்கப்பட்டமை போதைப்பொருள் பரவலை அடக் கும் செயல்பாட்டில் ஒரு முன்னேற்றம் என்றும், இதனு டன் கேள்விக்குரிய உண்மைகளையும் அரசாங்கம் தெளிவு படுத்த வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில்

07

# மீண்டும் ஒரு பாதாள உலகம் உருவாவதற்கு வாய்ப்பில்லை

## அமைச்சர் சமந்த வித்யாரத்ன

கொழும்பு, செப். 09

"நாட்டில் மீண்டும் ஒரு பாதாள உலகம் உருவாகுவதற்கு வாய்ப்பில்லை. ஏனென்றால் இப்போது அந்த ஊழல் அரசியல் காலம் முடிந்துவிட்டது" என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

ஹற்றனில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (அ)

# அரசியல் சார்பு கலாசாரத்தை முடிவுக்கு கொண்டுவந்தோம்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க பெருமிதம்

கொழும்பு, செப். 10

அரசாங்கம் அரசியல் சார்பு கலாசாரத்தை முடிவுக் குக் கொண்டு வந்துள்ளது என போக்குவரத்து, நெடுஞ் சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித் துள்ளார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஆட் சேர்ப்பு செய்யப்பட்ட 704 ஊழியர்களுக்கான

07

# நிமலராஜன் படுகொலை விசாரணை தோல்விகளை கொண்ட வழக்காகும்

## சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம்

கொழும்பு, செப். 09

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜ னின் படுகொலை குறித்த வழக்கானது உண்மையில் ஒரு வழக்கு விசாரணை எவ்வாறு இடம்பெறக் கூடாதோ அதற்கு உதார ணமாகக் குறிப்பிடக் கூடிய விசாரணை சார்ந்த தோல்விகளைக்கொண்ட ஒரு வழக்காகும் என ரெட்ரெஸ் மற்றும் சர்வ தேச உண்மைக்கும், நீதிக் குமான செயற்திட்டம் இணைந்து வெளியிட் டுள்ள புதிய அறிக்கையில்

07

# கிளிநொச்சியில் ரில்வின்!

கிளிநொச்சி, செப். 09

கிளிநொச்சிக்கு விஜ யம் செய்த மக்கள் விடு தலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில் வின் சில்வா கிளிநொச்சி மாவட்டத்தில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும்

07

# ரணில், கோட்டாவுக்கு எதிரான மனுவை விசாரிப்பதற்கு அனுமதி

கொழும்பு, செப். 09

காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் குறைப்பதற் கான முறையான திட்டத்தை வகுக்காததால் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்கக் கோரி முன்னாள் ஜனாதிபதிகள் கோட்டா பய ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட பல தரப்பினருக்கு எதிராக தாக்கல் செய்யப் பட்ட அடிப்படை உரிமைகள் மனுவை

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள ஆசிரியர்களின் பிரச்னைக்கு ஜனவரி மாதத்துக்குள் தீர்வு கிடைக்கும்

## வடக்கு மாகாண ஆளுநர் உறுதியளிப்பு



யாழ்ப்பாணம், செப். 09

தமது பிரச்னைகளுக்கு எதிர்வரும் ஜனவரி மாதத்திற்குள் தீர்வு தருவதாக வடக்கு மாகாண ஆளுநர் உறுதியளித்துள்ளதாக, வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில், சிங்கள மொழி மூல கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, கம்பஹா, காலி, களுத்துறை என பல வெளி மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 40இற்கும் அதிகமான, வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில், சிங்கள மொழி மூல கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள், தமது இடமாற்றம் தொடர்பில் கரிசனை செலுத்துமாறு வடக்கு மாகாண ஆளுநரிடம் நேற்று கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதற்கமைய, எதிர்வரும் ஜனவரி மாதத்திற்குள் தீர்வு தருவதாக, வடக்கு மாகாண ஆளுநர் உறுதியளித்துள்ளார்.

குறித்த ஆசிரியர்களுடன் கலந்துரையாடிய ஆளுநர், வெற்றிடங்களுக்கு ஏற்ப விண்ணப்பங்கள் கோரப்பட்டு, ஜனவரி மாதத்திற்குள் தீர்வை வழங்குவதாக தெரிவித்தார்.

குறித்த ஆசிரியர்கள், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அலுவலகம் சென்று, அங்கும் தமது பிரச்னைகள் குறித்து கலந்துரையாடியிருந்தனர். (அ)

# சாரதி போதைப்பொருடன் கைது

யாழ்ப்பாணம், செப். 09

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்குப்பிட்டி பகுதியில் நேற்று மதியம், சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்ட வீதி சோதனை நடவடிக்கையின் போது, ஐஸ் போதைப்பொருளுடன், எரிபொருள் தாங்கி வாகனத்தின் சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முத்துராஜவெல பகுதியில் இருந்து, யாழ்ப்பாணத்துக்கு எரிபொருள் ஏற்றி வந்த எரிபொருள் தாங்கியை சோதனையிட்டபோது, சாரதியிடம் இருந்து ஐஸ், கஞ்சா பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

அதனையடுத்து சாரதி கைது செய்யப்பட்டு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், சாரதி, ஐஸ் மற்றும் கஞ்சா பயன்படுத்திய நிலையில் வாகனத்தை செலுத்தியமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக, சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மின்சார தொழிற்சங்கங்கள் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை

கொழும்பு, செப். 09

இலங்கை மின்சார சபை ஊழியர்கள் தொடங்கிய சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தில் அரசாங்கம் எந்தவித அவதானத்தையும் செலுத்தவில்லை என இலங்கை மின்சார சபையின் சுதந்திர ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபையை நான்கு பகுதிகளாகப் பிரிப்பதற்கு எதிராக அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த தொழிற்சங்க போராட்டத்தின் முதல் கட்டம் இந்த மாதம் 15 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக அரசாங்கத்திடமிருந்து எந்த நேர்மறையான பதிலும் கிடைக்கவில்லை என்றால், சட்டப்படி வேலை செய்யும் போராட்டம் பணிப்புறக்கணிப்பாக தீவிரப்படுத்தப்படும் என இலங்கை மின்சார சபையின் சுதந்திர ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பிரபாத் பிரியந்த தெரிவித்தார்.

# புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் மாற்றுத் திறனாளிகளுக்கு காசோலை

முல்லைத்தீவு, செப். 09

புதுக்குடியிருப்பு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட, தெரிவு செய்யப்பட்ட 32 மாற்றுத் திறனாளிகளுக்கு, மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா வீதம், ஆறு மாதங்களுக்கு காசோலை வழங்கும் திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

அந்தவகையில், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 19 பயனாளிகளுக்கு நேற்று முன் தினம் மூன்று மாதத்துக்குரிய 15 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டதுடன், ஏனைய மூன்று மாதங்களுக்கான காசோலை வழங்கப்படவுள்ளது.

அத்துடன், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஏனைய 13 பயனாளிகளுக்கும், எதிர்வரும் நாட்களில் காசோலை வழங்கப்படவுள்ளது.

சபை அமைவதற்கு முன்னர், புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளரால், உள்ளூராட்சி மன்ற வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் விசேட முன்னனுமதிகள் தொடர்பில், வடக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

அதற்கமைவாக, வடக்கு மாகாண ஆளுனரின் அனுமதி பெறப்பட்டு, நேற்று மாற்றுத் திறனாளிகளுக்கு, காசோலை வழங்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை மண்டபத்தில், பிரதேச சபை தவிசாளர் வேலாயுதம் கரிகாலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளர் ச.கிருசாந்தன், பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், மாற்றுத் திறனாளிகள் என பலர் பங்கேற்றனர். (அ)

# எல்ல விபத்தின் பஸ் பரிசோதனைக்கு

கொழும்பு, செப். 09

எல்ல - வெல்லவாய பகுதியில் விபத்துக்குள்ளான பேருந்து தொடர்பில் தொடர்ச்சியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், அதன் ஓர் பகுதியாக அரச பகுப்பாய்வாளர்களால் பேருந்து பரிசோதிக்கப்படவுள்ளது.

விபத்தில் சிக்கிய ஜீப், பேருந்தின் பாகங்கள் நேற்று முன்தினம் எல்ல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மோட்டார் போக்குவரத்து திணைக்கள அதிகாரிகளும் பேருந்து பாகங்களை ஆய்வு செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# 83 கடவுச்சீட்டுகளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது

கொழும்பு, செப். 09

83 கடவுச்சீட்டுகளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கணேமுல்லை பொலிஸ் பிரிவின் ஹொரகொல்லை பகுதியில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கணேமுல்லை பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழு நடத்திய சோதனையை தொடர்ந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 51 வயதான பெண்ணும் 62 வயதான ஆண் ஒருவருமே இவ்வாறு கைதாகினர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கணேமுல்லை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டில் ஐஸ் போதைப்பொருள் உற்பத்தி தொழிற்சாலை ஆரம்பம்

## பெரமுன பொதுச் செயலாளர்

கொழும்பு, செப். 09

அநுர அரசாங்கம் பொறுப்பேற்றதைத் தொடர்ந்தே ஐஸ் போதைப்பொருள் உற்பத்தித்தொழிற்சாலை உருவாக்கப்பட்டுள்ளதாக பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பின், நுவரேலியாவில் 'ஐஸ்' எனப்படும் ஆபத்தான போதைப்பொருள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதான தகவல்கள் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ள . இது குறித்து நம்பகமான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

மேலும், நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக சுங்கத்துறையில் 323 சிவப்பு லேபிள் கொள்கலன்கள் எந்தச் சோதனையும் இன்றி விடுவிக்கப்பட்டது. இவை ஆயுதங்கள், போதைப்பொருட்கள், தடை செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணம் போன்றவற்றைக் கொண்டிருக்கலாம் என்ற கடுமையான சந்தேகங்கள் இருப்பதாகக எழுந்துள்ளது.

கொவிட் நெருக்கடியிலும் கூட ஒரு சிவப்பு லேபிள் கொள்கலனும் சோதனை இன்றி விடுவிக்கப்படவில்லை என்ற நிலையில், இம்முறை போலியான நெரிசலை உருவாக்கி இத்தகைய செயல் நடைபெற்றுள்ளது. நாட்டில் நாளுக்கு நாள் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. ஒரே நாளில் நான்கு துப்பாக்கிச்சூட்டுச்சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இது 1988/89 ஜேவிபி கிளர்ச்சி காலத்திற்குப் பிறகு இல்லாத அபாயகரமான சூழ்நிலையாக இருக்கின்றது. இவை அனைத்தும் "பாதாளக்குழுக்களின் போதைப்பொருள் சார்ந்த பிரச்னைகள்" என அரசாங்கம் மறைத்து வருகின்றது. தற்போது நாமல் ராஜபக்ஷவை இச்சம்பவங்களில் தொடர்புபடுத்த சதி இடம்பெறுகின்றது.

சுங்க அதிகாரிகள் பாகுபாடின்றி, 323 கொள்கலன்கள் எப்போது வந்தன, விடுவித்தது யார் ? அவற்றில் என்ன இருந்தது என்பதை குறித்து உண்மையான தகவல்களை மக்களிடம் வெளிப்படுத்த வேண்டும் .

அதேபோல், பாதுகாப்பு பிரதி அமைச்சர் வட்டகல உடனடியாக தனது குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்களை வெளிப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்-என்றார். (அ)

# சூதாட்ட விடுதியில் 15 பேர் கைது

கொழும்பு, செப். 09

சட்டவிரோதமாக இயங்கி வந்த சூதாட்ட விடுதியில் 11 பெண்களும் 4 ஆண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு - மொறட்டுவை - லுனாவ பிரதேசத்தில் இயங்கிய சூதாட்ட விடுதியே இவ்வாறு பிடிபட்டது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீண்ட காலமாக முழு நேர வேலையாக இந்த சூதாட்ட விடுதியை நடத்தியிருந்தனர் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அங்குலானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கொழும்பு துப்பாக்கிச்சூடு; இருவர் கைது

கொழும்பு, செப். 09

கொழும்பு - கிராண்ட்பாஸில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 5ஆம் திகதி கிராண்ட்பாஸ் - மஹவத்த மணிக்கூட்டு கோபுரம் அருகில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றது. இதில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 31 மற்றும் 32 வயதுடைய சந்தேகநபர்களே கைது செய்யப்பட்டனர். இவர்கள் கொழும்பு 15 பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
09.09.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், ஆவணி 24

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சில்வா கூறுவது நடந்தால் நல்லது

இன்றையநிலையில் இலங்கை அரசியலில் செல்வாக்குமிக்க நபர்களில் ஒருவராக நோக்கப்படும் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, இலங்கையில் இடம்பெற்ற தமிழினப் படுகொலைகளுக்கு உள்நாட்டு பொறிமுறை மூலம் நீதி கிடைக்கும் என்று தெரிவித்திருக்கிறார். யாழ்ப்பாணத்தில் நூல் நிலையம் ஒன்றைத் திறந்து வைத்ததன் பின்னர் இவ்வாறு கூறியிருக்கிறார். ஒரு காலத்தில் யாழ்ப்பாண நூல் நிலையத்தை எரித்த வரலாற்றைக் கொண்டிருக்கும் தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணத்தில் நூல் நிலையம் ஒன்றைத் திறப்பதற்காக ஒரு தென்னிலங்கை அரசியல்வாதி வந்து சென்றிருக்கிறார்.

தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள், அதன் விளைவான படுகொலைகள் அத்தோடு, இறுதியுத்தத்தின்போது இடம் பெற்றவை எனக் கூறப்படும் போர்க் குற்றங்கள் அனைத்துக்கும் உள்நாட்டு பொறிமுறை மூலம் தேசிய மக்கள் சக்தி நீதியை உறுதிப்படுத்துமாக இருந்தால் அது நல்லதே- அதனை அனைவரும் வரவேற்கத்தான் வேண்டும். ஆனால், அது எந்தளவு சாத்தியம் என்பதுதான் கேள்வி.

ரில்வின் சில்வா பிறிதொரு நிகழ்வில் மாற்றங்களை ஏற்படுத்த ஓர் ஆட்சிக்காலம் போதாது என்று கூறியதையும் நாம் இந்த இடத்தில் குறித்துக் கொள்ளலாம். இந்த அடிப்படையில் சிந்தித்தால் இந்த ஆட்சிக் காலத்தில் நீதியை நிலைநாட்டும் விவகாரத்தில் தேசிய மக்கள் சக்தியால் எதனையும் செய்யமுடியுமென்று எவரும் நம்பமுடியாது. இங்குள்ள அடிப்படையான பிரச்னை தமிழ் தரப்புகள் சர்வதேச விசாரணை என்னும் ஓர் ஒற்றைச் சொல்லைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், அதனை உச்சரிக்கின்ற அளவுக்கு அதற்கான முயற்சிகள் என்னவென்று கேட்டால் பதில் பூச்சியமாகவே இருக்கிறது.

ஏனெனில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குக் கடிதம் எழுதுவதைத் தாண்டித் தமிழர் தரப்புகளால் எதனையும் செய்ய முடியவில்லை. இந்த நிலையில் சர்வதேச விசாரணை என்பதற்கான பிரத்தியேக அழுத்தங்கள் எதனையும் இலங்கைமீது ஏற்படுத்துவதற்கு தமிழர் தரப்புகளால் முடியவில்லை. கடந்த பதினாறு வருடங்கள் இதனை தெளிவாக எடுத்துரைத்திருக்கின்றன. இந்தநிலையில்தான், ரில்வின் சில்வா உள்நாட்டுக்குள்தான் விசாரணை நடைபெறும் என்று துணிகரமாகக் கூறுகிறார். கொழும்பின்மீது பிரத்தியேக அழுத்தங்கள் எவையும் இல்லாதபோது அவர்கள் அவ்வாறு கூறுவதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

இறுதி யுத்தத்துக்குப் பின்னரான இலங்கைத் தீவின் அரசியலில் மகிந்த ராஜபக்ஷவின் காலமே ஒப்பீட்டடிப்படையில் மேற்குலகின் அழுத்தங்களுக்கு உள்ளான காலமாக இருந்தது. இதற்கு மகிந்த ராஜபக்ஷவின் சீன சார்பும் மேற்குலக எதிர்ப்பும் பிரதான காரணமாக இருந்தன. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் 2012இல் அமெரிக்கா நேரடியாக இலங்கையின் மனித உரிமைகள் விவகாரத்தில் தலையீடு செய்தது. பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவதற்காக அனுசரணை வழங்கியது. அந்தப் பிரேரணையை வெற்றிபெறச் செய்யவேண்டும் என்பதில் அப்போதிருந்த இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரன் பிரத்தியேக கவனம் செலுத்தினார்.

ஆனால், இப்போது நிலைமைகள் வேறு. முற்றிலும் மாற்றமடைந்து விட்டது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தேசிய மக்கள் சக்தி உள்நாட்டு விசாரணை என்பதை அழுத்திக் குறிப்பிடுகிறது. இதனைத் தமிழர் தரப்பால் எதிர்கொள்ளமுடியாது. வெறுமனே காட்போர்ட் அட்டைகளைத் தாங்கியாறு வீதிகளில் நிற்பதாலோ, பிரதேச சபைகளில் தீர்மானங்களைக் கொண்டுவருவதாலோ எவ்வித பயனும் இல்லை. சர்வதேச அளவில் லொபியை முன்னெடுக்கும் பலத்தோடு தமிழர் இல்லை.

# முல்லைத்தீவு ஏ.சி.பாம் கிராம மக்கள் தங்களை மீள்குடியமர்த்த கோரிக்கை

முல்லைத்தீவு, செப். 09

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட, ஏ.சி.பாம் கிராம மக்களை மீள்குடியமர்த்துவதற்கு, தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தண்டுவான் கிராமத்திற்கு அண்மையில் உள்ள ஏ.சி பாம் என்னும் பூர்வீகத் தமிழ் கிராமத்திலுள்ள மக்கள் இடம்பெயர்ந்து, 28 ஆண்டுகளாகியுள்ளபோதும், இதுவரையில் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை.

1997 ஆம் ஆண்டு, அப்பகுதியில் பூர்வீகமாக வாழ்ந்த சுமார் 46 குடும்பங்களைச் சேர்ந்த தமிழ் குடும்பங்கள், யுத்தம் காரணமாக தமது வாழிடங்களில் இருந்து இடம்பெயர்ந்தனர்.

எனினும், தற்போது வரை ஏ.சி. பாம் கிராமத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை.

இருப்பினும், குறித்த கிராமத்தில், மக்கள் வாழ்ந்தமைக்கான அடையாளங்கள் காணப்படுகின்றன.

அந்தவகையில், சிதைவடைந்த நிலையில் மக்கள் வாழ்ந்த வீடுகள் காணப்படுவதுடன், வேலிகளுக்காக நடப்பட்ட சீமைக்கிழுவை மரங்களும், மாமரம், தோடை உள்ளிட்ட பலன்தரு மரங்கள் பலவும் தற்போதும் காணப்படுகின்றன.

இத்தகைய சூழலில், கடந்த 2012 ஆம் ஆண்டு, குறித்த ஏ.சி பாம் கிராமம், தண்டுவான் ஒதுக்கக்காட்டுப் பகுதியாக வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், வன வளத் திணைக்களம் குறித்த பகுதியை ஆக்கிரமித்துள்ளது.

இவ்வாறான நிலையில், தங்களுடைய பூர்வீக வாழ்விடத்தில் மீள்குடியேற்றுமாறு, கிராம மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கைகளை விடுத்து வருகின்றனர். (அ)

# பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகத்தின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 09

பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகத்தின் அபிவிருத்தி தொடர்பாக இந்திய குழுவினருடனான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று பி.ப. 03.30 மணிக்கு அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் இந்திய துணைத் தூதரக உதவித் தூதுவர் சங்கரன் இராஜகோபாலன், தூதரக அதிகாரிகளான என். ரவி சங்கர், எம்.பி. பெலியப்பா உள்ளிட்டவர்கள் பங்குபற்றினார்கள்.

இக் கலந்துரையாடலில் அரசாங்க அதிபரால் துறைமுக அபிவிருத்தியின் அவசியம், தேவைப்பாடுகள் அதனால் ஏற்படும் சாதகங்கள், மீனவர்களுக்கான நன்மைகள், தொழில் வாய்ப்புக்கள் தொடர்பாக விளக்கமளித்து, அபிவிருத்தி தொடர்பாக இந்தியத் தூதரக அதிகாரிகளுடன் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்தரையாடலில் திட்டமிடல் பணிப்பாளர், பருத்தித்துறை பிரதேச செயலாளர், கரையோரம் பேணல், மூலவள முகாமைத் திணைக்கள பொறியியலாளர், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உத்தியோகத்தர்கள், மயிலிட்டி மீன்பிடித் துறைமுக முகாமையாளர் ஆகியோர் பங்குபற்றினார்கள். (அ-05)

# போக்குவரத்து சட்டங்கள் இனி கடுமையாக நடைமுறையாகும்

கொழும்பு, செப். 09

போக்குவரத்து சட்டம் நேற்று முதல் கடுமையாக அமுல்படுத்தப்படும் என போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது. இதற்காக வாகனங்களை சோதனை செய்ய நாடு முழுவதும் பொலிஸ் அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என போக்குவரத்து பிரதிய மைச்சர் பிரசன்ன குணசேன கூறியுள்ளார். போக்குவரத்திற்கு தகுதியற்ற வாகனங்கள் மற்றும் வண்ணங்கள் மாற்றப்பட்ட வாகனங்கள் குறித்தும் இதன்போது சோதனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், வெவ்வேறு வண்ணங்களில் கூடுதல் விளக்குகளுடன் இயங்கும் வாகனங்கள், வாகனங்களின் முன், பின் மற்றும் இரு பகுதிகளின் சித்திர வடிவமைப்புகள் மற்றும் விளம்பரங்கள் பிரசுரித்தல் மற்றும் சட்டவிரோத மேலதிக உதிரிப் பாகங்கள் தொடர்பிலும் சோதனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அதிக சத்தம் எழுப்பும் ஒலிப்பான் மற்றும் அதிக சத்தம் எழுப்பும் சைலன்சர்கள் கொண்ட வாகனங்கள் தொடர்பாக நேற்று முதல் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக போக்குவரத்து பிரதியமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்தார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**இடபம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும். அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். கடமையுணர்வுடன் செயல்பட வேண்டும்.

**மிதுனம்**
கடந்த இரண்டு நாட்களாகஇருந்த சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் சூட்சுமங்களைஉணருவீர்கள். மேலதிகாரிகளின் உதவி கிடைக்கும். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் அடுக்கடுக்கான வேலைகளால்அவதிக்கு உள்ளாவீர்கள். உத்தியோகத்தில் சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டி இருக்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
கடினமான வேலைகளையும் மாறுபட்ட அணுகுமுறையால் முடித்துக் காட்டுவீர்கள். சகோதர வகையில் நன்மை உண்டு. தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கன்னி**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும்.

**துலாம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். சக ஊழியர்கள் உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**விருட்சிகம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். அமைதி நிலவும். உழைப்பால் உயரும் நாள்.

**தனுசு**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். அரசால் ஆதாயம் ஏற்படும். உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்புகள் நீங்கும். தோற்றப் பொலிவு கூடும். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மனதில் இனம் புரியாத பயம்வந்துப் போகும். உத்தியோகத்தில் அதிகாரிகள் பகைத்து கொள்ள வேண்டாம். விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள்.

**மீனம்**
எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங்கள் கூட இழுபறியில் போய் முடியும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். தடைகளை தாண்டி முன்னேறும்நாள்.




## உலக இயன் மருத்துவ தினத்தை முன்னிட்டு மானிப்பாயில் நேற்றுக்காலை நடைபவனி

யாழ்ப்பாணம், செப். 09

உலக இயன் மருத்துவத் தினத்தை முன்னிட்டு நேற்றுக் காலை மானிப்பாயில் நடைபவனி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

உலக இயன் மருத்துவ தினத்தை முன்னிட்டு உலகளாவிய ரீதியில் பல்வேறு விதமான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் மானிப்பாய் மருத்துவமனையின் ஏற்பாட்டில் இந்த நடைபவனி முன்னெடுக்கப்பட்டது.

இந்த நடைபவனியில் கிறீன் மருத்துவமனை நிர்வாகத்தினர், மருத்துவர்கள், மருத்துவமனை ஊழியர்கள், மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-05)

## சிறையிலிருந்து வெளியே வந்தவர் சகோதரனுடன் இணைந்து தாக்குதல்

### இருவரும் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், செப். 09

வாளுடன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நபர் ஒருவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் சகோதரனுடன் இணைந்து மீண்டும் ஒரு வன்முறைச் சம்பவத்தில் ஈடுபட்ட நிலையில் இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முதலிகோவில் பகுதியில் நேற்று முன்தினம் வன்முறைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. நீண்ட காலமாக இருந்துவந்த காணித் தகராறு காரணமாகவே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கூரிய ஆயுதத்தால் தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்த நபர் வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தாக்குதல் நடத்திய இருவரையும் வட்டுக்கோட்டை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-05)

## கனடாவிலிருந்து யாழ். வந்த யுவதி புற்றுநோயால் மரணம்

யாழ்ப்பாணம், செப். 09

கனடாவில் வாழ்ந்து வந்த யாழ்ப்பாணத்தை சேர்ந்த யுவதி ஒருவர் சுற்றுலாவுக்காக யாழ்ப்பாணம் வந்திருந்த நிலையில் கடந்த 5 ஆம் திகதி உயிரிழந்தார்.

சதீஸ்வரன் சயினகா என்ற 22 வயதுடைய யுவதியே தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார். (எ-05)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப். 09

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை மாவை கலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 22 எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04. 00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் சைவப்புலவர் க. கைலநாதன் "பழியஞ்சின படலம்" என்னும் தலைப்பில் நிகழ்த்தும் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

**********

யாழ்ப்பாணம், செப். 09

யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் 38ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 05. 30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனும் சிறப்புச்சொற்பொழிவை இளஞ்சைவப்புலவர் க. கயிலைவாசன் "உருத்திரர் கேள்விப் படலம்" என்னும் தலைப்பில் நிகழ்த்தும் சிறப்புச் சொற்பொழிவும் சொற்பொழிவிலிருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (எ)

## அம்மனுக்கு விசேட அபிஷேக ஆராதனை

யாழ்ப்பாணம், செப். 09

யாழ்ப்பாணம், அச்செழு வடக்கு அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த விஷேட அபிஷேக ஆராதனை நேற்றுத் தொடங்கியது. பத்துத் தினங்கள் தொடர்ந்து அபிஷேக ஆராதனை நடைபெற்று எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை 108 சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (எ)

## யாழில் முழு நிலா நாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 09

உரும்பிராய் ஞான வைரவர் சனசமூக நிலையத்தின் முழு நிலா நாள் கருத்தரங்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிலையத் தலைவர் இரா. ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வளவாளராக சிவசேனையின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் கலந்து கொண்டு, "இன்றைய காலகட்டமும் சைவால யங்களும்" என்ற பொருளில் உரையாற்றினார். அத்துடன்




இந்த நிகழ்வில் பேச்சு நிகழ்த்திய உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய மாணவி ஒருவருக்கு பரிசிலும் வழங்கினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து பணியாற்ற முடிவு

## ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு



கொழும்பு, செப். 09

**ஐக்கிய மக்கள் சக்தியுடன் வெளிப்படையாக பணியாற்ற ஐக்கிய தேசிய கட்சி முடிவு செய்துள்ளதாக அந்தக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.**

மேலும், ஆரம்பகட்ட கலந்துரையாடல்களின் இணக்கப்பாட்டுக்கு அமைய ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் பிற எதிர்க்கட்சிகளுடன் தொடர்ந்து பணியாற்ற ஐக்கிய தேசிய கட்சி முடிவு செய்துள்ளது.

இதற்காக, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட பிற எதிர்க்கட்சிகளுடன் இணைந்து பணியாற்ற குழு அல்லது இதேபோன்ற பொறிமுறையின் மூலம் பணியாற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் பிற எதிர்க்கட்சிகளுடன் பொதுவான பிரச்னைகள் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி நீண்ட காலமாக கலந்துரையாடி வருகிறது. இந்தக் கலந்துரையாடல்களில் இணக்கம் ஏற்பட்ட விடயங்களை தொடர்ந்து செயல்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

# பாணந்துறை நிலங்கவின் சகாக்கள் இருவர் கைது!

கொழும்பு, செப். 09

இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட "பாணந்துறை நிலங்க"வின் சகாக்கள் இருவர் களுத்துறை பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறை பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலின்பேரில் நேற்றுமுன்தினம் அருக்கொடை பகுதியில் சுற்றிவளைக்கப்பட்டது. இதன்போது, 02 கிராம் 200 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள், 7 கைபேசிகள், மோட்டார் சைக்கிளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதில், 38 வயதான நபர் ஒருவரே கைதானார். கைதானவர், கடந்த ஜுலை 11ஆம் திகதி ஹிரணை பிரதேசத்தில் நபரை சுட்டுக் காயப்படுத்தியிருந்தார். மே 25 ஆம் திகதி பின்வத்தையில் வீடு ஒன்றின்மீது துப்பாக்கிச்சூடு நடத்த உடந்தையாக இருந்தார் என்று கூறப்படுகிறது.

அத்துடன், அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் பாணந்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பட்டுவிட பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 2 கிராம் 100 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள், ரி -56 ரக துப்பாக்கி ஒன்று, 30 தோட்டாக்களுடன் மற்றுமொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இவர்கள் இருவரும் அண்மையில் இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்ட 6 பாதாள உலகக் குழு தலைவர்களில் ஒருவரான "பாணந்துறை நிலங்க" என்பவரின் சகாக்கள் என்று அறிய வருகிறது. (ஐ)

# தென்னக்கோனுக்கு எதிரான வழக்கு ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, செப். 09

தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபராக நியமித்தமைக்கு எதிரான மனு மீதான விசாரணையை அடுத்த ஆண்டு பெப்ரவரி 12ஆம் திகதிக்கு ஒத்திவைத்து உயர்நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபராக நியமிப்பதற்கான தீர்மானம் அரசமைப்புக்கு முரணானது என தீர்ப்பளிக்கக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுக்கள் பிரீத்தி பத்மன் சூரசேன, மகிந்த சமயவர்த்தன, அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்த மனு மீதான விசாரணை 2026ஆம் ஆண்டு பெப்ரவரி 12 ஆம் திகதி வரை ஒத்திவைத்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

# தனியாக வசித்தவர் மர்மமாக இறப்பு

கொழும்பு, செப். 09

தனியாக வசித்த வந்த நபர் ஒருவர் மர்மமாக உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குருநாகல் - கொயேகனை பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதே இடத்தை சேர்ந்த திருமணமாகாத 59 வயது நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கொபேய்கனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# இரு வேறு விபத்துகளில் இருவர் உயிரிழந்தனர்!

கொழும்பு, செப். 09

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இடம்பெற்ற விபத்துகளில் இருவர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இரு விபத்துகளும் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளன. பொல்பிதிகம பொலிஸ் பிரிவில் கும்புகுலாவ - இருதெனியாய வீதியில் வவ்லேவ பகுதியில் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வடிகானுடன் மோதியதில் அதனை செலுத்தியவர் உயிரிழந்தார்.

இதேநேரம், கெஸ்பேவ பொலிஸ் பிரிவில் உள்ள கெஸ்பேவ-பண்டாரகம வீதியில் மாகந்தன மோட்டார் சைக்கிள் காருடன் மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் உயிரிழந்தார். (ஐ)

# மூடவுள்ள 33 அரச நிறுவனங்களின் பெயர்களை வெளியிட வேண்டும்!

## மக்கள் போராட்ட அமைப்பு

கொழும்பு, செப். 09

"நட்டமடைந்து வருவதாக 33 அரச நிறுவனங்களை மூடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எனினும், அந்த நிறுவனங்களின் பெயர்களை இதுவரை வெளியிடவில்லை", என்று மக்கள் போராட்ட அமைப்பின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் துமிந்த நாகமுவ தெரிவித்தார்.

மக்கள் போராட்ட அமைப்பு கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், 33 அரச நிறுவனங்களை மூடிவிட தீர்மானித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கடந்த அமைச்சரவை தீர்மானங்களை வெளியிடும் செய்தியாளர் சந்திப்பின்போது தெரிவித்திருந்தார். ஆனால், அரசாங்கம் மூடிவிட தீர்மானித்திருக்கும் இந்த 33 அரச நிறுவனங்கள் தொடர்பில் அரசாங்கம் இதுவரை நாட்டுக்கு வெளிப்படுத்த வில்லை.

அமைச்சரவையில் 33 அரச நிறுவனங்களை மூடிவிடுவதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றிருந்தால் அந்த 33 நிறுவனங்களும் என்ன என்பதை அனைவரும் தெரிந்திருக்க வேண்டும். 33 அரச நிறுவனங்களின் பெயர்களை அரசாங்கம் இதுவரை வெளிப்படுத்தாதன் மூலம் இந்த நிறுவனங்கள் என்ன என்பது தொடர்பில் தெரியாமலா அமைச்சரவை இதற்கு அனுமதி வழங்கி இருக்கிறது. என்ற கேள்வி எழுகிறது - என்றார். (ஐ)

# மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் கட்டுமானம் மீண்டும் ஆரம்பமாகிறது

கொழும்பு, செப். 09

நீண்ட காலமாக இடைநிறுத்தப்பட்டிருந்த மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் கட்டுமானப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடவத்தை முதல் மீரிகம வரையிலான மத்திய அதிவேக நெடுஞ்சாலைக்கான சீன நிதியுதவி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கட்டுமானத்தை இந்த மாதத்தில் அல்லது அடுத்த மாத தொடக்கத்தில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹூலங்கமுவ வெளியிட்டுள்ளார்.

37 கிலோமீற்றர் நீளமுள்ள இந்த வீதியின் கட்டுமானத்துக்கு சீனாவிடமிருந்து தேவையான நிதி உதவியை இலங்கை பெற முடிந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

மீதமுள்ள கட்டுமானப் பணிகளின் அளவை அடிப்படையாகக் கொண்டு, கட்டுமானம் முழுமையாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டவுடன் இரண்டரை ஆண்டுகளுக்குள் திட்டம் நிறைவடையும் என அதிகாரிகள் மதிப்பிடுகின்றனர். (ஐ)

# கந்தானையிலும் இரசாயன பொருள் மீட்கப்பட்டது

கொழும்பு, செப். 09

போதைப்பொருள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் இரசாயன பொருள் கம்பஹா - கந்தானையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இந்த இரசாயனப் பொருளை பொலிஸார் கண்டறிந்தனர். கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் அண்மையில் மித்தெனியவில் கண்டுபிடிக்கப்பட்ட ஐஸ் போதைப்பொருளை தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டும் இரசாயனத்தை ஒத்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# மருமகனை பொல்லால் அடித்து கொன்ற மாமன்

கொழும்பு, செப். 09

மதுபோதையில் தகராறு செய்ததுடன், தனது மகளையும் தாக்க முயன்ற மருமகனை (மகளின் கணவர்) மாமனார் பொல்லால் தாக்கிக் கொன்றார்.

காலி - கரந்தெனிய பகுதியில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், 24 வயது நபரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது, சம்பவ தினத்தன்று உயிரிழந்த நபர் வீட்டில் நண்பர்களுடன் மதுபானம் அருந்தியுள்ளார். தொடர்ந்து மதுபோதையில் உள்ள தனது நண்பர்களை அவர்களின் வீட்டில் கொண்டுசென்று விடுவதற்காக தனது மாமனாரிடம் அவரின் ஓட்டோவை தருமாறு கேட்டுள்ளார்.

ஆனால், அதற்கு அவர் மறுப்பு தெரிவித்துள்ளார். இதனால் கோபமடைந்த மருமகன் பொல்லால் வீட்டின் கதவை அடித்து உடைத்ததுடன், மனைவியையும் தாக்க முயன்றுள்ளார். இதனை தடுக்க மாமனார் முயன்றுள்ளார். ஒரு கட்டத்தில் அந்தப் பொல்லை பறித்து மருமகனை தாக்கியுள்ளார். இதில், மருமகன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதையடுத்து, 58 வயதான மாமனார் கரந்தெனிய பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.

மேலதிக விசாரணைகளை கரந்தெனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# விபத்தில் இருவர் காயம்!

கொழும்பு, செப். 09

பதுளை மாவட்டம் வெல்லவாய - தனமல்வில பிரதான வீதியில் யாலபோவ டிப்போவுக்கு அண்மையாக நேற்று லொறியும் காரும் மோதி விபத்துக்கு உள்ளாகின.

இதில், காரில் பயணித்த இருவர் காயமடைந்து வெல்லவாய ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

லொறி வீதியில் கவிழ்ந்ததால் அந்த வீதியில் போக்குவரத்தும் சில மணி நேரம் தடைப்பட்டது.

இந்த சம்பவம் குறித்து வெல்லவாய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறிழைக்கும் அரசாங்கம் நீதியைப் பெற்றுத் தருமா?

## மூதூரில் நேற்று கவனவீர்ப்பு போராட்டம்

மூதூர், செப். 09

எங்கள் விடயத்தில் தவறிழைக்கும் அரசாங்கம் நீதியைப் பெற்றுத் தருமா? என்று கேள்வி எழுப்பியும் பாடசாலையில் கடமை புரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவைக்குள் இணைப்புச் செய்யுமாறு கோரியும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்றுக் காலை நடைபெற்றது.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டமானது திருகோணமலை, மூதூர் வலயக் கல்விப் பணிமனைக்கு முன்பு நடைபெற்றது.

இதன்போது எங்கள் விடயத்தில் தவறிழைக்கும் அரசாங்கம் நீதியைப் பெற்றுத் தருமா?, ஐந்து வருடங்களாக பாடசாலையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இணைப்பு செய்யப்பட்டு ஆசிரியர்களாக பணியாற்றுகின்ற எங்களுக்கு நீதி வேண்டும் போன்ற பல வாசகங்களை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (எ)



# ஹெரோயினுடன் கைதான இளைஞனிடம் விசாரணை

கல்முனை, செப். 09

ஹெரோயின் போதைப்பொருளுடன் கைதான இளைஞனிடம் மேலதிக விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனியார் ஜஸ்வாடி பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் நடமாடிய இளைஞனை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்தனர்.

கல்முனை விசேட அதிரடிப் படை புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது 25 வயது சந்தேக நபர் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட கடற்றொழில் செய்யும் சந்தேக நபரிடமிருந்து 740 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன் சந்தேக நபர் உட்பட சான்றுப்பொருட்கள் யாவும் சட்ட நடவடிக்கைக்காக கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் விசேட அதிரடிப் படையினரால் சட்ட நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும், இச்சோதனை நடவடிக்கையானது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் டி. ஜி. எஸ்.டி சில்வா பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக் கட்டளை பதில் அதிகாரி, பொலிஸ் அத்தியட்சகர் குணசிறியின் அறிவுறுத்தலுக்கமைய மட்டக்களப்பு வலய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சம்பத் ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப் படை முகாம் பதில் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் பி. இஹலகே தலைமையிலான விசேட அதிரடிப்படை அதிகாரிகள் இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-01)





அம்பாறை மாவட்டம், நிந்தவூர் - அட்டப்பள்ளம் சிறீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் தீர்த்தோற்சவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்ற போது...
(படங்கள்:- வி.ரி. சகாதேவராஜா)

# மட்டு. முதலியார் சின்ன லெப்பை வீதி வடிகானில் கழிவுநீர் தேங்கி துர்நாற்றம்

## மக்கள் கடும் விசனம்

மட்டக்களப்பு, செப். 09

மட்டக்களப்பு நகரிலுள்ள முதலியார் சின்னலெப்பை வீதியில் உள்ள வடிகானில் கழிவுநீர் வழிந்தோட முடியாது தேங்கி நிற்பதுடன் கடுமையான துர்நாற்றம் வீசி வருவதால் அந்த வீதி ஊடாக பயணிக்கும் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த வடிகான்களில் பிளாஸ்ரிக் பொருட்கள் குவிந்து காணப்படுவதுடன் மரங்கள் வளர்ந்து வருகிறது. தேங்கி நிற்கும் கழிவு நீரால் துர்நாற்றம் வீசி வருவதால் அந்த வீதியில் குடியிருப்பவர்கள், வீதி ஊடாக பயணிப்பவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்த போதும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க வில்லை. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா? துர்நாற்றம் இல்லாமல் செய்வார்களா? வடிகான்களை துப்புரவு செய்வார்களா? என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (எ)

# அதிக விலைக்கு மதுபானம் விற்ற மதுபானசாலைக்கு சீல் வைப்பு

ஹற்றன், செப். 09

ஹற்றன், பொகவந்தலாவ பிரதான வீதியின் பொகவந்தலாவ டியன்சின் பகுதியில் இயங்கி வந்த மதுபானசாலை ஒன்றுக்கு கலால் திணைக்கள அதிகாரிகளால் சீல் வைக்கப்பட்டுள்ளதாக கொட்டகலை கலால் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த மதுபானசாலையில் நீண்டகாலமாக மதுபான வகைகள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வந்ததன் காரணமாக கண்டி விசேட கலால் திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய கடந்த சனிக்கிழமை இரவு குறித்த மதுபானசாலைக்கு சென்ற அதிகாரிகள் சென்று ஒரு மதுபான போத்தலும் ஒரு பியரும் கொள்வனவு செய்த போதே இவர்கள் அதிக விலைக்கு விற்பனை செய்தமை தெரியவந்தது.

இதனையடுத்து குறித்த மதுபானசாலைக்கு அதிகாரிகள் சீல் வைத்தனர்.

இதேவேளை, அபராதம் செலுத்தும்வரை குறித்த மதுபானசாலையை திறக்க முடியாதென கலால் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கண்டி மற்றும் கொட்டகலை கலால் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பெண்ணை கொலை செய்ய உதவிய இளைஞன் கைது!

கல்முனை, செப். 09

பெரியநீலாவணை பகுதியில் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் அம்பாறை குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்ற இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் அதிகாரிகள் குழு நடத்திய விசாரணையைத் தொடர்ந்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

இதன்படி, கொலைக்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில் சந்தேகநபர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இதேநேரத்தில், சந்தேகநபருக்குச் சொந்தமான வான் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் பொலிஸார் பொறுப்பேற்றனர்.

கைது செய்யப்பட்ட நபர் பெரியநீலாவணை பகுதியைச் சேர்ந்த 20 வயது இளைஞன் என தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பாறை குற்றத் தடுப்புப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# நீரில் மிதந்தவாறு காணப்பட்ட இருவரின் சடலங்கள் மீட்பு

கண்டி, செப். 09

கண்டி, பல்லேகலெ பொலிஸ் பிரிவின் திறந்தவெளி சிறைச்சாலை முகாமுக்கு அருகிலுள்ள விக்ரோரியா நீர்த்தேக்கத்தில் மிதந்தவாறு காணப்பட்ட ஆண் ஒருவரின் சடலம் நேற்றுக்காலை மீட்கப்பட்டது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் பார்பர் வத்தை, குன்னேபான பகுதியைச் சேர்ந்த 63 வயதானவர் என தெரியவந்துள்ளது.

சடலம் கண்டி மருத்துவனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பல்லேகலெ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை குருநாகல், கும்புக்கெட்டே பொலிஸ் பிரிவின் ஹெட்டிகம பகுதியில் உள்ள கிம்புல்வா ஒய மண்டலபல பாலம் அருகே நீரில் மிதந்தவாறு காணப்பட்ட சடலம் ஒன்று மீட்கப்பட்டது.

இறந்தவர் ஹெட்டிகம, கும்புக்கெட்டே பகுதியைச் சேர்ந்த 80 வயதானவர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த மரணம் நீரில் மூழ்கி இறந்ததா? அல்லது வேறு ஏதேனும் சந்தேகத்துக்கிடமான மரணமா? என்பது குறித்து கும்புக்கெட்டே பொலிஸார் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர்.

# மாவடிப்பள்ளி பாலம் அருகில் வயல்வெளியில் கசிப்பு மீட்பு

## இரு இளைஞர்கள் சிக்கினர்


கல்முனை, செப். 09

வயல்வெளியில் மறைத்து வைக்கப்பட்ட பெருந்தொகை கசிப்பு போத்தலுடன் இரண்டு சந்தேக நபர்களை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்தனர்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிப்பள்ளி பாலத்துக்கு அருகில் உள்ள ஆற்றோர வயல்வெளியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கல்முனை விசேட அதிரடிப் படையினரின் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றுக்கமைய குறித்த பகுதியில் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்போது, 23 மற்றும் 26 வயதுடைய வீரமுனை பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர்களை 40 லீற்றர் கசிப்புடன் கைது செய்தனர். கைதான சந்தேக நபர்களை சான்றுப்பொருட்களுடன் காரைதீவு பொலிஸ் நிலையத்தில் கல்முனை விசேட அதிரடிப்படையினர் சட்ட நடவடிக்கைக்காக ஒப்படைத்தனர். (எ-01)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளக...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில் நேற்று உரையாற்றும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அத்துடன், உள்நாட்டு பொறிமுறைகள் மூலம் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலைப் பின்பற்றுவதற்கான தமது உறுதிமொழியை இலங்கை மீண்டும் வலியுறுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாடு முழுவதும் ஜனநாயகம், நீதி மற்றும் நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், சுயாதீன விசாரணைகள் மற்றும் வழக்குத் தொடர உதவும் புதிய சட்டத்தின் மூலம் ஊழல் எதிர்ப்பு இயக்கம் வலுப்படுத்தப்பட்டுள்ளது. இது ஏற்கனவே முக்கிய தண்டனைகளுக்கு வழிவகுத்துள்ளது.

சர்ச்சைக்குரிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்து செய்து புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தால் மாற்றுவதற்கான பணிகளும் நடந்து வருகின்றன. இணையவழி பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தங்கள் பரந்த ஆலோசனைகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

நீதித்துறை மேற்பார்வையின் கீழ் நடத்தப்படும் செம்மணி மனித புதைகுழி அகழ்வுக்கு தேவையான வளங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவுவதற்கான ஆலோசனைகள் நடந்து வருகின்றன, அதே நேரத்தில் நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு குறித்த தேசிய கொள்கை மற்றும் செயல் திட்டத்தை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

சிவில் சமூகத்திற்கான இடத்தை உறுதி செய்ய சட்ட அமுலாக்க நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்களை பிறப்பிக்கப்பட்டுள்ளன. நாடு முழுவதும் உள்ள மக்கள் தற்போது தடையின்றி அன்புக்குரியவர்களை நினைவுகூர முடியும்.

இந்த தொலைநோக்கு பார்வைக்கு இணங்க, பன்முகத்தன்மை மற்றும் நல்லிணக்கத்தைக் கொண்டாடுவதற்கு டிசெம்பர் முதல் வாரம் இலங்கை தினமாக அனுஷ்டிக்கப்படும்.

இலங்கையின் நீதித்துறை சுதந்திரத்தை நிரூபித்துள்ளது. இதற்கு அண்மைய நீதிமன்ற தீர்ப்புகள் ஆதாரமாக மேற்கோள் காட்டமுடியும்.

2019 உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான தாக்குதல்கள் உள்ளிட்ட நீண்டகால வழக்குகளில் விசாரணைகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன.

மோதலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பெரும்பாலான காணிகள் அசல் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. விடுவிக்க முடியாத இடங்களுக்கு இழப்பீடு வழங்கப்படுகிறது.

மனித உரிமைகள் பேரவை மற்றும் பிற ஐ.நா. வழிமுறைகளுடன் ஆக்கபூர்வமாக தொடர்ந்து ஈடுபடுவதை இலங்கை மீண்டும் உறுதிப்படுத்துகிறது, ஒரு வருடத்துக்கும் குறைவான காலத்தில் அடையப்பட்ட முன்னேற்றம் நல்லிணக்கத்திற்கான தங்களது உண்மையான அர்ப்பணிப்பை நிரூபிக்கிறது.

இலங்கைக்கான பொறுப்புக்கூறல் திட்டம் போன்ற எந்தவொரு வெளிப்புற பொறிமுறையையும் நாங்கள் எதிர்க்கிறோம், இது பிளவுகளை மட்டுமே உருவாக்குகிறது மற்றும் நாட்டில் நடந்து வரும் நல்லிணக்க செயல்முறையை சிக்கலாக்குகிறது.

இலங்கையின் முன்னேற்றத்தை அங்கீகரித்து, தேசிய செயல்முறைகள் மூலம் நல்லிணக்கத்தை முன்னேற்றுவதற்குத் தேவையான நேரத்தையும் இடத்தையும் வழங்குமாறு மனித உரிமைகள் பேரவையையும் சர்வதேச சமூகத்தையும் இலங்கை அரசாங்கம் வலியுறுத்துகிறது.

அனைத்து இலங்கையர்களின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வை பாதுகாக்க இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பைப் பயன்படுத்த தொடர்ச்சியான ஆதரவை இலங்கை கோருகிறது- என்றார். (அ)

## சகோதரனின்...

சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். சாட்சிகளை மானிப்பாய் பொலிஸார் நெறிப்படுத்தினர். (அ-05)

## கிளிநொச்சியில்...

கட்சியின் செயற்பாட்டாளர்கள் சந்தித்து கலந்துரையாடி உள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட பயிற்சி நிலையத்தில் நேற்றுக் காலை 9 மணி அளவில் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது.

இதில் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் தேசிய மக்களின் மாவட்ட அமைப்பாளர் மருங்கன் மோகன், கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்கள் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (அ)

## நல்லிணக்கம்...

வழங்குதல், நீண்டகாலமாக இலங்கை மக்கள் அனுபவித்துவரும் அரசியல் ரீதியான பாகுபாடுகள் மற்றும் பிரிவினையை நீக்குதல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும். இலங்கை அரசாங்கம், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் குறித்து தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வேண்டும். இவையே, எதிர்கால குணப்படுத்துதல், நல்லிணக்கம் மற்றும் நிலையான அமைதியை வளர்ப்பதற்கு அவசியமானவை - என்றார்.

மேலும், இலங்கை பயணத்தின்போது, மனித உரிமைகள் மீறல், துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்டவர்களின் தொடர்ச்சியான துன்பங்களை தாம் நேரடியாக கண்டேன் என்றும் செம்மணி மனித புதைகுழியில், தனது அன்பானவரின் இழப்பை தாங்கிக்கொள்ளாத துக்கத்தில் இருக்கும் ஒரு குடும்பத்தை தாம் சந்தித்தார் எனவும் குறிப்பிட்ட டர்க், தென் மாகாணத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணும் 30 ஆண்டுகளுக்குப் பிறகும் தனது கணவரைத் தேடி வருகிறார் என்றும் தம்மிடம் கூறினார் என்றும் தெரிவித்தார்.

தண்டனையிலிருந்து விலக்கு என்பது, இரண்டாவது வன்முறை வடிவமாகும். இது தீங்கு சுழற்சிகளை நிலைநிறுத்துகிறது. இந்த நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் கவனிக்கப்பட வேண்டும். அவர்களின் குரல்கள் பொறுப்புக்கூறல், உண்மை, நீதி மற்றும் இழப்பீடு குறித்த அரசாங்கத்தின் கொள்கைகளை வழிநடத்த வேண்டும்.

அத்துடன், உள்நாட்டு போரின்போது மனித உரிமைகள் மீறல் உள்ளிட்ட மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களை முறையாக ஒப்புக்கொள்ள வேண்டும். அரசு மற்றும் அதன் படைகள் அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும். அவர்கள் செய்த உரிமைகள் மீறல், குற்றங்களின் நீடித்த தாக்கத்தை அங்கீகரிக்க வேண்டும்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளைப் போன்ற அரசு சாராத ஆயுத குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட மீறல்கள் தொடர்பிலும், உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். இதுவே, பொதுவான நீதி வழங்கப்படுகிறது என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும்.

இதனிடையே, இலங்கை அரசாங்கம் விரிவான அரசமைப்பு, சட்ட மற்றும் நிறுவன சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய அவசரத் தேவை உள்ளது. கடந்த கால துயரங்கள் மீண்டும் ஒருபோதும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதற்கு இது மிகவும் முக்கியமானது.

சுயாதீன அங்கத்தவர்களை கொண்ட, சுயாதீன பொது வழக்கு தொடுநர் பணிமனை ஒன்றை அமைப்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் முயற்சியையும் ஆணையாளர் வரவேற்றுள்ளார்.

இதேபோன்று, பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் குடியரிமை தொடர்பான பாராளுமன்ற சீர்திருத்தத்தை தாம் தீவிரமாக ஊக்குவிக்கிறார் என்றும் கூறினார். (அ)

## இந்தியாவை...

அவர் மேலும் தெரிவித்ததாவது-

பாரதப் பிரதமாரான நரேந்திர மோடி, தமிழ் மக்களது இருப்பை பாதுகாக்கவும் நிரந்தரமான தீர்வை தமிழர்களுக்கு பெற்றுத் தருவதற்கும், இந்த மண்ணிலே தமிழர்கள் சுய கௌரவத்துடன் வாழ்வதற்கும் வழி சமைக்க முன்வரவேண்டும்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஒரு அரசியல் தீர்வாக தமிழர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அது இன்று வரை நடைமுறையில் உள்ளது. இதனால் அத் தேர்தலை நடத்தவும் உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றார்.

## ரணில்...

விசாரிக்க உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி அளித்துள்ளது.

சுற்றுச்சூழல் நீதி மையத்தால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

மனுதாரர் தரப்பில் சட்டத்தரணி ரவீந்திரநாத் தாபரே முன்னிலையானார்.

நீதிமன்றத்தில் ஆதாரங்களை சமர்ப்பித்த அவர், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் சூழ்நிலைகளைத் தீர்க்க அரசாங்கங்கள் முறையான திட்டங்களை செயல்படுத்தத் தவறியதால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டினார்.

முன்வைக்கப்பட்ட உண்மைகளைக் கருத்தில் கொண்டு, மனுவுக்கு ஏதேனும் ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய பிரதிவாதிகளுக்கு கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மனு மீதான விசாரணை மார்ச் 13ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ)

## அரசியல்...

நிரந்தர நியமனங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது வழங்கப்படும் அனைத்து நியமனங்களும் கட்சி அல்லது இனத்தைவிட சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும். கடந்த அரசாங்கங்கள் அரச நிறுவனங்களை அரசியல்மயமாக்கி, அரசியல் ஆட்சேர்ப்பு மூலம் அரச நிதியை வீணடித்தன.

கடந்த வருடம் செப்ரெம்பர் 21 ஆம் திகதி மக்கள் அளித்த ஆணை நாட்டை ஒரு புதிய பாதையில் பயணிக்க செய்துள்ளது. ஊழல் நிறைந்த சகாப்தம் முடிவுக்கு வந்துள்ளதுடன் சமத்துவம் மற்றும் பொறுப்புக்கூறலுக்கு உறுதியளித்துள்ள அரசாங்கம் உருவாகியுள்ளது -என்றார். (அ)

## டெங்கு...

நேற்று அவர் வெளியிட்ட செய்தி குறிப்பில்-

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயின் பரம்பல் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் யாழ் மாவட்டத்தில் 937 டெங்கு நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த வருடத்தில் யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய் காரணமாக எந்தவொரு இறப்பும் பதிவாகவில்லை.

யாழ். மாவட்டத்தில் பருவ மழைக் காலம் ஆரம்பிக்க இருப்பதால் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டியுள்ளது. பொதுமக்கள் மத்தியில் டெங்கு கட்டுப்பாட்டு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் பல்வேறு நிறுவனங்களிலும் டெங்கு விழிப்புணர்வு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படவுள்ளன. இதன்படி, எதிர்வரும 14ஆம் திகதி சகல வணக்கத்தலங்களிலும் 15ஆம் திகதி சகல அரச நிறுவனங்களிலும் 16ஆம், 17ஆம் திகதிகளில் சகல பாடசாலைகளிலும் இந்த டெங்கு விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம்பெறும்.

இதனைத் தொடர்ந்து 22ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரையிலான மூன்று தினங்களும் விசேட டெங்கு கட்டுப்பாட்டு தினங்களாக பிரகடனப்படுத்தப்படவுள்ளது -என்றுள்ளது. (அ)

## ஐஸ் கொள்கலன்...

நேற்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மன்றத்துடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இதனை தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், 2 கொள்கலன்கள் துறைமுகத்திலிருந்து எவ்வாறு வெளியே வந்தன என்பது கேள்விக்குரியதாகும் எனவும் குறிப்பிட்டார்.

இந்த போதைப்பொருள் மூலப் பொருட்கள் கொண்ட கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டது குறித்த அனைத்து தகவல்களும் நாட்டிற்கு வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றும், இந்த போதைப்பொருள் கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டது தொடர்பான கேள்விக்குரிய தகவல்கள் குறித்த உண்மையை வெளிப்படுத்த வேண்டும் என்றார். (அ)

## நிமலராஜன்...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

பி.பி.சி ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலை குறித்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் தோல்வி பற்றி சித்திரவதைகளை முடிவுக்கு கொண்டுவருவதற்கும், தப்பிப்பிழைத்தவர்களுக்கான நீதியைக் கோருவதற்குமான "ரெட்ரெஸ்" அமைப்புடன் இணைந்து சர்வதேச உண்மைக்கும், நீதிக்குமான செயற்திட்டத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள 70 பக்க விரிவான அறிக்கை நேற்று திங்கட்கிழமை வெளியிடப்பட்டது.

"இலங்கையில் கால் நூற்றாண்டுக்கும் மேலாக ஊடகவியலாளர்களின் படுகொலைகளுடன் தொடர்புடையவர்கள் திட்டமிட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றனர். 2000 - 2010 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் உள்நாட்டு போர் குறித்து செய்தியறிக்கையிட்டு வந்த ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப்பணியாளர்களின் சுமார் 44 பேர் கொல்லப்பட்டனர். இருப்பினும் இன்று வரை இப்படுகொலைகளுடன் தொடர்புடைய எந்தவொரு குற்றவாளியும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை" என அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

## மலையக...

அனுர குமார திசாநாயக்கவுக்கு எழுதியுள்ள அவசர கடிதத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

குறித்த கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மலையக தமிழ் மக்கள் சமூக, பொருளாதார, கலாசார, வளர்ச்சிகளில் குன்றிய பிரிவினர் என்பதை புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

இது 200 வருட சாபம், இதற்கு காரணம், இந்த சமூகம் இந்நாட்டின் தேசிய வரம்புக்குள் கொண்டு வரப்படாமல் இன ரீதியாக ஒதுக்கி வைக்கப்பட்டமை ஆகும். இந்த மக்களின் பிரச்னைகளை ஒரு துறை சார்ந்த அமைச்சால் மட்டும் செய்ய முடியாது. அமைச்சுகளுக்கு மேலாக, பல்வேறு துறை சார்ந்த அமைச்சுகளின் பணிகள் கூட்டிணைக்கப்பட வேண்டும். இந்த பிரதான தேவை பின்புலத்தில், மலையக மக்களின் விசேட குறைதீர் கொள்கை தேவை அடிப்படையில் உருவாக்கப்பட்ட நிறுவனமே மலையக அதிகார சபை ஆகும். நீங்கள் இன்று இதை, ஓர் அமைச்சின் அங்கமாக மாற்ற முயல்கிறீர்கள். அமைச்சு என்பதும் அதன் நடவடிக் கைகளும் நாட்டின் ஜனாதிபதியால் தீர்மானிக்கப்படுகின்றன. நாளை குறிப் பிட்ட அமைச்சு இல்லாமல் போகுமா னால், அந்த அமைச்சின் அங்கமும் காணாமல் போய்விடும்.

ஆனால், அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டு, பராளுமன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டு, சட்டம் மூலமாக உருவாக்கப்பட்ட திணைக்களங்கள், அதிகார சபைகள் என்பன அமைச்சுகள், அரசாங்கங்கள் மாறுகின்ற காரணத்தால், மாறி விடாது. காணாமல்போய் விடாது. இந்த அடிப்படை உண்மையை நீங்கள் புரிந்து கொண்டு இந்த முயற்சியை நிறுத்த வேண்டும் - என்றுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மாகாண சபைகள் தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெறும்

## ஜே. வி. பி. பொதுச் செயலாளர் ரில்வின்

யாழ்ப்பாணம், செப். 09

**புதிய ஆணைக்குழு மூலம் எல்லை நிர்ணயம் செய்து, அடுத்த ஆண்டு மாகாண சபைகள் தேர்தலை நடத்துவோம். இந்தத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெறும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**



மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கத்துக்கு சந்தர்ப்பம் இருக்கிறது. ஆனால், சில சட்டசிக்கல்கள் இருக்கின்றன. குறிப்பாக, கடந்த அரசாங்கம் தேர்தல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டது.

அதற்கமைய, புதிதாக எல்லை நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளது.

முன்னதாக செய்யப்பட்ட எல்லை நிர்ணயத்தில் பல தவறுகள் இருந்தமையால் பாராளுமன்றத்தில் அது நிறைவேற்றப்படவில்லை. இதன் காரணமாகவே மாகாண சபைகள் தேர்தலை நடத்த முடியவில்லை. இந்தநிலையில், புதிதாக மீண்டும் எல்லை நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளது. அதற்காக புதிய ஆணைக்குழு ஒன்றை நியமித்து, எல்லை நிர்ணயம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே, எதிர்வரும் வருடத்தில் எல்லை நிர்ணயம் செய்யப்பட்டு மாகாண சபைகள் தேர்தலை நடத்த முடியும்.

இதற்கமைய, ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வெற்றிக் கொண்டது போன்று மாகாண சபைகள் தேர்தலையும் தேசிய மக்கள் சக்தி வெற்றிகொள்ளும் - என்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தியின் பணிமனையில் நூலகத்தை திறந்து வைத்து உரையாற்றியபோது தெரிவித்தார். (ஐ)

## பிரசன்னவுக்கு மீளவும் மறியல்

கொழும்பு, செப். 09

முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீரவை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு மஹர நீதிவான் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிரசன்ன ரணவீர, மஹர நீதிவான் ஜனிதா பெரேரா முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டில் போலி ஆவணங்களை தயாரித்து கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள அரச காணி ஒன்றை விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் பிரசன்ன ரணவீரவை கைது செய்ய நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

ஆனால், முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர நீதிமன்றில் சரணடையாமல் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்று நீண்ட காலமாக தலைமறைவாக இருந்தார். பின்னர், முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர கடந்த மே 07 ஆம் திகதி நீதிமன்றில் சரணடைந்தார். இதைத் தொடர்ந்து அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நிமல் லான்சாவுக்கு பிணை

கொழும்பு, செப். 09

முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சாவை பிணையில் விடுவிக்க நீர்கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிமல் லான்சா நேற்றைய தினம் நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். இதன்போது, அவரை 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான 2 சரீர பிணையில் விடுவித்தது நீதிமன்றம்.

2006ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றில் தாக்குதல் நடத்தியமை தொடர்பில் நிமல் லான்சா தேடப்பட்டார். இதையடுத்து, அவர் கொச்சிக்கடை பொலிஸ் நிலையத்தில் கடந்த ஓகஸ்ட் 29 ஆம் திகதி சரணடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாதாள குழுவினரின் கைதால் சில அரசியல்வாதிகள் கலக்கம்

கொழும்பு, செப். 09

பாதாள குழுக்களின் முன்னிலை தரப்பினரை கைது செய்தவுடன் ஒருசில அரசியல்வாதிகள் கலக்கமடைந்தனர். போதைப்பொருள் வியாபாரத்துக்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையில் தொடர்புள்ளது என்பதை நாட்டு மக்கள் வெகுவிரைவில் உறுதியாக அறிந்துகொள்வர் என்று வர்த்தகத்துறை மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊழல்வாதிகளுக்கு சட்டத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கும்போது எதிர்க்கட்சிகள் அனைத்தும் தற்போது ஒன்றிணைந்துள்ளன. எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் அனைவரும் நண்பர்கள் என்பதை நாட்டு மக்கள் இதனூடாக விளங்கிக் கொள்ளவேண்டும். இவர்கள் ஆட்சியில் இருந்தால் அவர்களின் நண்பர்களான ஊழல்வாதிகள் அனைவரும் பாதுகாக்கப்படுவார்கள்.

ஊழல் மோசடியால்தான் இந்த நாடு வங்குரோத்து நிலையடைந்தது. ஆகவே, ஊழல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்போது அதனை அரசியல் பழிவாங்கல் என்று எவ்வாறு குறிப்பிடுவது.

பாதாளக் குழுக்களின் முன்னிலை தரப்பினரை கைது செய்தவுடன் ஒருசில அரசியல்வாதிகள் கலக்கமடைந்துள்ளார்கள். இதனையும் அரசியல் பழிவாங்கல் என்று எதிர்க்கட்சியினர் குறிப்பிடாமல் இருப்பது ஆச்சரியத்துக்குரியது.

போதைப்பொருள் வியாபாரத்துக்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையில் தொடர்புள்ளது என்பதை நாட்டு மக்கள் வெகுவிரைவில் உறுதியாக அறிந்துக்கொள்வார்கள். கடந்த அரசாங்கங்களின் அரச அனுசரணையில் பாதாள குழுக்கள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகர்கள் பாதுகாக்கப்பட்டார்கள்.

பாதாளக் குழுக்களின் முன்னிலை தரப்பினர் கைது செய்யப்பட்டு அவர்களால் வெளிப்படுத்தப்படும் விடயங்களால் ஜனாதிபதி கனவு காண்பவர்கள் தற்போது அச்சமடைந்துள்ளார்கள். இவர்கள் தான் கடந்த காலங்களில் பாதாளக்குழுக்களை போசித்தார்கள். அதன் விளைவையே நாடு இன்று எதிர்கொள்கிறது - என்றார். (ஐ)

## வெப்பமான காலநிலையால் காட்டு தீ பரவல் அதிகரிப்பு!

கொழும்பு, செப். 09

நாட்டில் நிலவும் வெப்பமான காலநிலை காரணமாக பல பகுதிகளில் காட்டுத் தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பொலநறுவை - திம்புலாகல - கந்த பகுதியில் தீ பரவல் ஏற்பட்டது.

இதேபோன்று, நேற்றுமுன்தினம் இரவு உடவளவை வனப்பகுயில் காட்டுத் தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, மாத்தளை உக்குவெலவில் வனப் பகுதி, இரத்தினபுரி, கொன்கஸ்தென்ன வனப் பகுதியிலும் காட்டு தீ பரவல் ஏற்பட்டன என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இந்தத் காட்டு தீ பரவல் அனைத்தும் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ரூ. 18 ஆயிரம் கோடி பெறுமதியான பழங்கள், மரக்கறிகள் வீண்விரயம்!

கொழும்பு, செப். 09

நாட்டில் ஆண்டுதோறும் அறுவடை மற்றும் விற்பனைக்குப் பின்னர் 18 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதிய ளவிலான பழங்கள், மரக்கறி வகைகள் வீண்விரயம் செய்யப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

இவ்வாறு வீண்விரயம் செய்யப்படும் பழங்கள், மரக்கறிகள் நாட்டில் வாழும் மக்களுக்கு இரண்டு முதல் நான்கு மாதங்களுக்கு உணவளிக்க போதுமானது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

போக்குவரத்தின்போது மாத்திரம் ஆண்டுதோறும் 5 இலட்சம் மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான பழங்கள், மரக்கறிகள் வீண்விரயமாகின்றன.

அறுவடையின்போது, சுமார் 30 சதவீதம் தொடக்கம் 40 சதவீதம் வீணாகின்றன.

இந்தக் காரணங்களால் விவசாயிகள், சில்லறை விற்பனையாளர்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர். எனினும், இவர்கள் பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டுதல்களை பின்பற்றத் தவறுவதே பழங்கள், மரக்கறிகள் வீணாகக் காரணம் என்றும். பரிந்துரைகளை பின்பற்றினால் 5.7 வீத பழங்கள், மரக்கறிகள் வீணாவதை தடுக்க முடியும் என்றும் கூறப்படுகிறது. (ஐ)

## சோமரத்னவை சந்திப்பதற்கு ஓ. எம். பி. மீண்டும் முயற்சி!

கொழும்பு, செப். 09

கிருசாந்தி படுகொலை வழக்கின் மரண தண்டனை கைதியான சோமரத்ன ராஜபக்ஷவை காணாமல் போனவர்கள் பற்றிய பணிமனை (ஓ. எம். பி.) மீண்டும் சந்திப்பது குறித்து கலந்துரையாடப்படுகிறது.

ஏற்கனவே, அவரை சந்தித்து கலந்துரையாடிய நிலையில் மீண்டும் அவரை சந்திப்பதற்கான தேவைகள் குறித்து ஆராயப்படுவதாக காணாமல் போனவர்கள் பற்றிய பணிமனையின் தலைவர் மகேஸ் கட்டுலந்த தெரிவித்துள்ளார்.

சோமரத்ன ராஜபக்ஷவை சிறைச்சாலைக்கு சென்று சந்தித்த காணாமல்போனோர் பற்றிய பணிமனையின் பல்வேறு விடயங்களை கேட்டறிந்து கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், குறித்த சாட்சியங்களுடன் அடுத்தக்கட்ட நடவடிக்கையை முன்னெடுப்பதா? அல்லது அவரை மீண்டும் சந்திப்பதா? என்பது குறித்து கலந்துரையாடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், அவரை மீண்டும் சந்திப்பதற்கான எவ்வித இறுதி தீர்வும் இதுவரை எடுக்கப்படவில்லை என்றும் காணாமல் போனவர்கள் பற்றிய பணிமனையின் தலைவர் மகேஸ் கட்டுலந்த தெரிவித்தார். (ஐ)

# கம்மன்பிலவை கைது செய்ய முயற்சி எதிர்க்கட்சிகளை இணைய கோரிக்கை!

## பிவிதுறு ஹெல உறுமய கட்சி விடுத்தது

கொழும்பு, செப். 09

விடுதலை புலிகள் அமைப்பின் முன்னாள் போராளியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சோடிக்கப்பட்ட சாட்சியை அடிப்படையாகக் கொண்டு கடற்படையின் முன்னாள் தளபதி நிஷாந்த உலுகேதென்ன கைது செய்யப்பட்டார் என்று உதய கம்மன்பில குறிப்பிட்டதால் இனங்களுக்கிடையில் எவ்வித முரண்பாடுகளும் ஏற்படவில்லை. அரசியல் பழிவாங்கலுக்காகவே முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவை ஐ. சி. சி. பி. ஆர். சட்டத்தின் பிரகாரம் கைது செய்ய முயற்சிக்கிறது. இதற்கு எதிராக சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என்று பிவிதுறு ஹெல உறுமய கட்சி சிறீ லங்கா பொதுஜன பெரமுனவிடம் வலியுறுத்தியுள்ளது.

பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் செயலாளர் உட்பட உறுப்பினர்கள் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரை சந்தித்து மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் ... பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.